1968 மார்ச் 26]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, பண்டைத் தமிழகக் கட்டிடக் கலைக்குச் சான்றாகவும், இன்றைய பொறியியல் துறைக்குச் சவாலாகவும் விளங்கும் இந்த மகாலில் அரசின் அலுவலகங்கள் செயல்படுவதால் அதன் அழகு கெடுகிறது. மேலும் அங்கு அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதைக் கவனிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த மகாலைப் பழுது பார்த்து நல்ல முறையில் வைக்க ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது, நீதி மன்றம் மாற்றப்பட்டவுடன் அந்த வேலை துவங்கும்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த நீதிமன்றத்திற்குப் புதிதாகக் கட்டிடம் கட்டிக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அந்தக் கட்டிடம் எப்போது கட்டப்பட்டு நீதிமன்றம் அங்கே மாற்றப் படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமது அங்கத்தினர் சமீபத்தில் மதுரைக்குச் சென்றிருப்பார் என எண்ணுகிறேன். மிக விரைவாக வேலை நடந்து வருகிறது. ஜூன் மாதத்திற்குள் 'கிரவுண்ட் ஃப்ளோர்' மட்டும் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

Government Ophthalmic Hospital, Madras

• 336 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) is it a fact that the Government Ophthalmic Hospital in Madras is kept in a most insanitary condition; and

(b) if so, the steps taken to improve it?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Is the Minister aware of the fact that many " letters to the editor " appeared in the Press regarding the insanitary condition of this Hospital and has the Minister at least once visited the hospital at least after any giving notice of the question ? It is still in a very sad state. Will the Government rectify the defecti n the intersets of the atients, in the interests of the people and in the interests of the party in power instead of evading a proper answer to my question ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் "இவேடிங் தி கொஸ்டின்" என்றெல்லாம் சொல்லக் கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM : He can evade, I have a right to say that he is evading.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டுகள் இருக்கக் கூடாது என்று விதியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பத்திரிகைகளில் இதுபோன்ற கோரிக்கை வந்திருப்பது எனக்குத் தெரியாது. கனம் உறுப்பினர் கேள்விக்கு முன்னாலேயே நான் அங்கு சென்றிருக்கிறேன்.

I have made a surprise visit to the Government Ophthalmic Hospital on 8th February 1968 at 11 a.m. and found the condition satisfactory.

8—2—1968-ஆம் தேதியன்று நானாகவே சென்று "ஆப்தல்மிக்" ஹாஸ்பிடலையும் பார்த்திருக்கிறேன். நான் பார்த்த அளவில் குறையில்லை.

THIRU K. VINAYAKAM : On a point of personal explanation. Please take my original question. It was put not in February but much earlier. Only after several "letters to the editor" appeared in the Press, I put the question. It is not as if I want to quarrel with the Minister. Will he take my allegation into consideration and see whether the malady can be remedied?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு முன்னேயே நான் போய்ப் பார்த்தேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : சார், மத்திய சர்க்கார் சுகாதார அமைச்சர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கூட சென்னையிலே ஒரு விழாவில் பேசும்பொழுது சென்னையிலுள்ள ஆஸ்பத்திரிகளில் சுகாதார முறை சரியாகயில்லை, அவைகளை யெல்லாம் சீர்படுத்த வேண்டுமென்று சொன்னாரே அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி எனக்குத் தெரியாது. கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னால் அது பற்றிக் கவனிக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, the complaint with regard to the Government Ophthalmic Hospital which my hon. Friend, Thiru Vinayakam, has raised, is a chronic one. It has been there for the past 10 or 15 years. In fact three years ago there was a facsimile printed in the 'Indian Express' in that regard. The officers there insisted upon the income certificate and even if a serious patient goes there and if he does not produce an income certificate, his case is not attended to immediately and there is enormous delay, about which we have raised questions in the Legislature. Now that the new Ministry has assumed office, will the Hon. Minister give an assurance or tell us whether he will take particular interest in this Hospital especially in view of the fact that there has been a chronic complaint on the working of the hospital?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The main question is about the sanitary conditions of the hospital.

1968 மார்ச் 26]

திரு. டி. மார்டின் : டெபுடி ஸ்பீக்கர் சார், அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற நேரத்தில், பத்திரிகையிலே வந்தது தெரியாது என்று கூறினார்கள். நம்முடைய அரசில் இன்பர்மேஷன் டிபார்ட்மெண்ட் என்று ஒரு டிபார்ட்மெண்ட் இருக்கிறது. (மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் மணி அடித்தார்.) I am putting the question அதிலிருந்து அமைச்சர் அவர்களுக்கு அவருடைய இலாக்கா சம்பந்தப்பட்ட முறையில் பத்திரிகையில் வருகின்ற செய்தியைத் தெரிவித்துள்ளார்களா என்று மட்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளாக இருந்தால், அது அவசியமாகத் தெரிவிக்கப் பட்டுத்தான் வருகிறது.

மாம்பலம் ரயில் நிலையத்தருகில் சுரங்கப்பாதை

* 337 வினா.—திரு. வை. சுவாமிநாதன்
திரு. நா. காசிராமன் } : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழைய மாம்பலத்தில் உள்ள லேக் வியூ சாலையையும் புதிய மாம்பலத்தில் உள்ள துரைசாமி சாலையையும் இணைக்கும் ரோடின் இடையில் உள்ள ரெயில்வே கேட்டின் கீழ் ஒரு சுரங்கப் பாதை (Sub-way) அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. நா. காசிராமன் : சார், இந்தச் சுரங்கப் பாதைகள் அமைப்பதற்குக் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதற்காக ஒதுக்கப்பட்ட தொகைகூடச் செலவழிக்கப்படவில்லை என்று அப்ரோப்பிரியேஷன் அக்கவுண்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை உபயோகப்படுத்தி, அந்தச் சுரங்கப் பாதைகளை வெகு விரைவிலே அமைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தச் சுரங்கப் பாதையை 9 அடி உயரத்தில் கட்டுவதாக முன்னாலே திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை 12 அடி உயரத்தில் கட்டினால் போகுவரத்துக்கும் வண்டிகளும் செல்லக்கூடிய முறையில் இருக்கும் என்று திருத்திய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 25 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டபோது மாநகராட்சி மன்றம் பாதியை ஏற்றுக் கொள்ளுவதாகவும் அரசாங்கம் பாதியை ஏற்றுக்கொள்ளுவதாகவும் முடிவு செய்யப்பட்டு, அந்த வேலையைச் செய்கின்ற பொறுப்பு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்